# பைந்தமிழ் கவியரங்கம்

**Annai College of Arts & Science**
Quality Education for Today & Tomorrow
Accredited by NAAC with "B" Grade & Recognized by UGC under Section 2(f) & 12(B)
Affiliated to Bharathidasan University,Tiruchirappalli. E-mail:acasdmn@gmail.com

# பைந்தமிழ் கவியரங்கம்

தலைப்பு : பைந்தமிழ் கவியரங்கம்

நாள் : 29.08.2019

இடம் : எம்.சி.ஏ கருத்தரங்க அறை

ஒருங்கிணைப்பாளர்

தமிழ்த்துறைத்தலைவர்

தமிழ்த் துறைத் தலைவர்
அன்னை கலை மற்றும் அறிவியல் கல்லூரி
கோவிலாச்சேரி,
கும்பகோணம் - 612 503.

IQAC

IQAC Co-ordinator.
Annai College of Arts & Science
Kovilacheri, Kumbakonam-612 503

முதல்வர்

Principal
Annai College of Arts & Science
Kovilachery, Kumbakonam-612 503

**Annai College of Arts & Science**
Quality Education for Today & Tomorrow
Kovilacheri, Kumbakonam. 612 503. Ph: 0435 2453007
Accredited by NAAC with "B" Grade & Recognized by UGC under Section 2(f) & 12(B)
Affiliated to Bharathidasan University, Tiruchirappalli. E-Mail:acasdmn@gmail.com

ACAS/PAI-TAMIL/19003 19-08-19

சுற்றறிக்கை

பைந்தமிழ் கவியரங்கம்

29.08.2019 அன்று தமிழ்த்துறை பைந்தமிழ் கவியரங்கத்தின் சார்பில் கவிதைப்போட்டி காலை 11.00 மணி அளவில் எம்.சி.ஏ கருத்தரங்க அறையில் நடைபெற உள்ளது. இப்போட்டியில் அனைத்து துறை மாணவ மாணவிகளும் கலந்துக் கொள்ளலாம். விருப்பதுள்ள மாணவர்கள் பெயரினை தங்கள் வகுப்பிற்கு வரும் தமிழ்த்துறைப் பேராசிரியர்களிடம் 26.08.2019 தேதிக்குள் பதிவு செய்து கொள்ள வேண்டும். கவிதைகள் மாணவர் சொந்த முயற்சியில் எழுதி, அவரே மேடையில் வாசிக்க வேண்டும். அங்ஙனம் சிறந்த முறையில் எழுதி வாசிக்கும் மாணவர்களை ஊக்கப்படுத்தும் வகையில் பரிசும் சான்றிதழும் வழங்கப்படும்.

போட்டியின் தலைப்பு

1.மழை

2.மரம்

3.ஆசிரியர்

ஒருங்கிணைப்பாளர்

(முனைவர் சு.அன்புச்செழியன்)

தமிழ்த்துறைத்தலைவர்

(முனைவர் ஜே.லொயோலாபீரிஸ்)

தமிழ்த் துறைத் தலைவர்
அன்னை கலை மற்றும் அறிவியல் கல்லூரி
கோவிலாச்சேரி.
கும்பகோணம் - 612 503.

13/9/19

முதல்வர்

(முனைவர் சீ.பொ.மாணிக்கவாசுகி)

Principal
Annai College of Arts & Science
Kovilachery, Kumbakonam-612 503

# நிகழ்ச்சி நிரல்

# அன்னை கலை மற்றும் அறிவியல் கல்லூரி

## கோவிலாச்சேரி, கும்பகோணம்.

## பைந்தமிழ் கவியரங்கம்

**நிகழ்ச்சி நிரல்**

**இடம் : எம்.சி.ஏ. கலையரங்கம்**

**நாள் : 29.08.2019**

**நேரம் : காலை 11.00 மணி**

| | | |
|---|---|---|
| தமிழ்த்தாய் வாழ்த்து | : | மாணவிகள் |
| வரவேற்புரை | : | முனைவர்.**சு.அன்புச்செழியன்**<br>உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை. |
| தலைமையுரை | : | முனைவர்.**சி.பொ.மாணிக்கவாசுகி**<br>முதல்வர், அன்னை கலை மற்றும் அறிவியல் கல்லூரி. |
| சிறப்புரை | : | திரு.**மு.இ.ஹுமாயூன் கபீர்** அவர்கள்,<br>செயலர்,<br>அன்னை கல்வி குழுமம். |
| வாழ்த்துரை | : | பேராசிரியர்.**சி.இளஞ்செழியன்**<br>துணை முதல்வர்<br>பேராசிரியர்.**க.ராஜா**<br>துணை முதல்வர்<br>முனைவர்.**ஜே.லொயோலா பீரிஸ்**<br>தமிழ்த்துறைத் தலைவர் |
| கவிதை வாசிப்பு | : | மாணவர்கள் |
| நன்றியுரை | : | முனைவர்.**இரா.தமிழ்ச்செல்வி**<br>உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை. |

நாட்டுப்பண்




பைந்தமிழ் கவியரங்க அழைப்பிதழ்

நடுவர்கள்:-

1. முனைவர். **இரா. கலையரசி** (உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை)

2. பேரா. வ. **திருமுருகன்** (உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை)

# நடுவர்களின் தீர்ப்பு

## அன்னை கலை மற்றும் அறிவியல் கல்லூரி

கோவிலாச்சேரி, கும்பகோணம்,

## பைந்தமிழ் கவியரங்கம்

நடுவர் : **பேராசிரியர். வ. திருமுருகன்**

**தமிழ்த்துறை**

| வ. எண் | பெயர் | துறை | கருத்து | தெளிவு | நயம் | கூடுதல் |
|---|---|---|---|---|---|---|
| 1 | இரா. அனிதா | III B.A (English) | 3 | 1 | 1 | 5 |
| 2 | பு. சந்தியா | I B.Lit | 3 | 2 | 2 | 7 |
| 3 | நி. மனிஷா | I B.Lit | 2 | 2 | 1 | 5 |
| 4 | மு. ராதை | II B.B.A | 2 | 2 | 1 | 5 |
| 5 | அ. அருணா | I B.Lit | 2 | 1 | 1 | 4 |
| 6 | இரா. பிரவினா | III B.Sc (M) | 3 | 2 | 1 | 6 |
| 7 | ர. ராகுல் | III B.Sc (M) | 2 | 1 | 1 | 4 |
| 8 | பு. சாருபாலா | I B.Sc (M) | 4 | 2 | 2 | 8 |
| 9 | து. தரணி | I B.Sc (M) | 2 | 1 | 1 | 4 |
| 10 | த. மணிகண்டன் | I B.Sc (M) | 2 | 1 | 1 | 4 |
| 11 | மு. கயல்விழி | I B.Sc (MI) | 2 | 1 | 1 | 4 |
| 12 | இரா. பேபி அக்ஷயா | I B.Sc (M) | 3 | 1 | 1 | 5 |
| 13 | உ. ஹரினி | II BBA | 4 | 3 | 2 | 9 |
| 14 | ச. அனுசுயா | II B.Sc (M) | 3 | 1 | 1 | 5 |
| 15 | ரா. காயத்ரி | II BBA | 1 | 2 | 3 | 6 |
| 16 | பா. கிரித்திகா | III B.Lit | 1 | 1 | 1 | 3 |
| 17 | அ. முத்துமினாட்சி | II BBA | 1 | 1 | 1 | 3 |
| 18 | செ. சஞ்சய் | II BBA | 2 | 2 | 2 | 6 |
| 19 | நா. மோகனபிரியா | I B.Sc (MI) | 2 | 1 | 1 | 4 |
| 20 | அ. சம்பத் | II BBA | 1 | 1 | 1 | 3 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 21 | க. ஜோதிகா | II BBA | 2 | 1 | 1 | 4 |
| 22 | மா. கமலி | I B.Com (AP) | 2 | 1 | 1 | 4 |
| 23 | அ. தேன்மொழி | I B.Com (R) | 2 | 1 | 1 | 4 |
| 24 | இரா. சுபாஷினி | I B.Com (R) | 3 | 2 | 1 | 6 |
| 25 | அ. லோகேஷ் பிரியதர்ஷினி | I B.Sc (CH) | 5 | 3 | 2 | 10 |
| 26 | ம. ஷிபா | I B.Com | 2 | 2 | 2 | 6 |
| 27 | இரா, மதுபாலா | III B.A (English) | 2 | 2 | 2 | 6 |
| 28 | கு. விஜயா சாந்தி | II B.Sc (M) | 2 | 1 | 2 | 5 |
| 29 | ச. பேபிஷாலினி | I. B.lit | 3 | 1 | 1 | 5 |
| 30 | இரா. கௌசல்யா | II B.Sc | 1 | 1 | 1 | 3 |
| 31 | ரா. திவ்யா | B.Sc | 2 | 1 | 1 | 4 |
| 32 | து. சுபாஷினி | I B.Com | 1 | 2 | 1 | 4 |
| 33 | ம. திவ்யா | I B.Sc (BIO) | 2 | 1 | 1 | 4 |
| 34 | ஜெ. லாவண்யா | I B.Com (AP) | 2 | 1 | 1 | 4 |

# அன்னை கலை மற்றும் அறிவியல் கல்லூரி

கோவிலாச்சேரி, கும்பகோணம்,

## பைந்தமிழ் கவியரங்கம்

நடுவர் : **முனைவர். இரா. கலையரசி**

**தமிழ்த்துறை**

| வ. எண் | பெயர் | துறை | கருத்து | தெளிவு | நயம் | கூடுதல் |
|---|---|---|---|---|---|---|
| 1 | இரா. அனிதா | III B.A (English) | 2 | 1 | 2 | 5 |
| 2 | பு. சந்தியா | I B.Lit | 2 | 1 | 3 | 6 |
| 3 | நி. மனிஷா | I B.Lit | 3 | 1 | 1 | 5 |
| 4 | மு. ராதை | II B.B.A | 1 | 2 | 1 | 4 |
| 5 | அ. அருணா | I B.Lit | 3 | 1 | 1 | 6 |
| 6 | இரா. பிரவினா | III B.Sc (M) | 1 | 2 | 1 | 4 |
| 7 | ர. ராகுல் | III B.Sc (M) | 1 | 2 | 1 | 4 |
| 8 | பு. சாருபாலா | I B.Sc (M) | 4 | 2 | 2 | 8 |
| 9 | து. தரணி | I B.Sc (M) | 1 | 2 | 1 | 4 |
| 10 | த. மணிகண்டன் | I B.Sc (M) | 1 | 1 | 2 | 4 |
| 11 | மு. கயல்விழி | I B.Sc (MI) | 1 | 1 | 2 | 4 |
| 12 | இரா. பேபி அக்ஷயா | I B.Sc (M) | 2 | 1 | 2 | 5 |
| 13 | உ. ஹரினி | II BBA | 4 | 3 | 2 | 9 |
| 14 | ச. அனுசுயா | II B.Sc (M) | 3 | 1 | 1 | 5 |
| 15 | ரா. காயத்ரி | II BBA | 1 | 2 | 3 | 6 |
| 16 | பா. கிரித்திகா | III B.Lit | 1 | 1 | 1 | 3 |
| 17 | அ. முத்துமினாட்சி | II BBA | 1 | 1 | 1 | 3 |
| 18 | செ. சஞ்சய் | II BBA | 2 | 2 | 2 | 6 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 19 | நா. மோகனபிரியா | I B.Sc (MI) | 2 | 1 | 1 | 4 |
| 20 | அ. சம்பத் | II BBA | 1 | 1 | 1 | 3 |
| 21 | க. ஜோதிகா | II BBA | 2 | 1 | 1 | 4 |
| 22 | மா. கமலி | I B.Com (AP) | 2 | 1 | 1 | 4 |
| 23 | அ. தேன்மொழி | I B.Com (R) | 2 | 1 | 1 | 4 |
| 24 | இரா. சுபாஷினி | I B.Com (R) | 3 | 2 | 1 | 6 |
| 25 | அ. லோகேஷ் பிரியதர்ஷினி | I B.Sc (CH) | 5 | 3 | 2 | 10 |
| 26 | ம. ஷிபா | I B.Com | 2 | 2 | 2 | 6 |
| 27 | இரா, மதுபாலா | III B.A (English) | 2 | 2 | 2 | 6 |
| 28 | கு. விஜயா சாந்தி | II B.Sc (M) | 2 | 1 | 2 | 5 |
| 29 | ச. பேபிஷாலினி | I. B.lit | 3 | 1 | 1 | 5 |
| 30 | இரா. கௌசல்யா | II B.Sc | 1 | 1 | 1 | 3 |
| 31 | ரா. திவ்யா | B.Sc | 2 | 1 | 1 | 4 |
| 32 | து. சுபாஷினி | I B.Com | 1 | 2 | 1 | 4 |
| 33 | ம. திவ்யா | I B.Sc (BIO) | 2 | 1 | 1 | 4 |
| 34 | ஜெ. லாவண்யா | I B.Com (AP) | 2 | 1 | 1 | 4 |

# புகைப்படம்




நிகழ்வின் தொடக்கத்தில் ஒருங்கிணைப்பாளர் முனைவர் சு. அன்புச்செழியன் வரவேற்றார்.



நிகழ்வின் போது முதல்வர். முனைவர்.

சி. பொ. மாணிக்கவாசுகி அவர்கள்

தலைமையுரை வழங்குதல்.




கவியரங்கத்தில் மாணவியின் கவிதை வாசிப்பு.

# பரிசு பெற்ற மாணவர்களின் விபரம்




முதல் பரிசு பெற்ற மாணவி

ரா. லோகேஷ் மரியதர்ஷினி-க்கு பேராசிரியர்.

துணை முதல்வர். சி. இளஞ்செழியன் அவர்கள்

சான்றிதழ் வழங்குதல்.




இரண்டாம் பரிசு பெற்ற மாணவி

உ. ஹரிணி.




மூன்றாம் பரிசு பெற்ற மாணவி

பூ. சாருபாலா .




கவியரங்கத்தில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு
சான்றிதழ் வழங்கி வாழ்த்துரை வழங்கினார்
பேராசிரியர். துணை முதல்வர். சி. இளஞ்செழியன்.

# பைந்தமிழ் கவியரங்கத்தில் பங்குபெற்ற மாணவர்களின்கவிதை தொகுப்புகள்

# முதல் பரிசு

# மரம்

ரோஜா ப்ரியதர்ஷினி

உலகத்து மரங்கள் எல்லாம்
உரங்களாகி விட்டது
அங்காங்கே ஒற்றை மரம்
அனாதையாக்கப் பட்டது.

வெண்ணிலவில் காற்றைச் செலுத்தி
விடுகட்ட ஆசைப்பட்டான்
மண்ணுலகில் மடிந்து போகும்
காற்றைப்பேண மறந்து விட்டான்.

பிராணவாயு அத்தனையும்
கரிம வாயு ஆகிடுதுப்பார்
கண்ணறியா காற்றுக்கூட
கண்ணுக்குத் தெரியுதுபார்.

காடுகளை நீயழித்து
கட்டடங்கள் எழுப்பி விட்டாய்
ஓடுகின்ற நிலைக்கூட
தொட்டுப்பார்த்து சிரித்து விட்டாய்.

ஒட்டுமொத்த ஓசோனும்
ஓட்டையானதை அறியலியா
விஞ்ஞான அறிவுக்கு
இன்னாணம் புரியலயா.

மூச்சுவிடும் காற்றுகூட
விலைக்கு வாங்கும் நாள்வரும்
எம்மனிதா அன்று தான்
உனக்கெல்லாம் புத்திவரும்.

உன்றவரே!

மக்கள் பண்பு இல்லாதவரை
மரம் என்றீர்.
மரம் என்றால் அவ்வளவு மட்டமா?

ஔவையே !

நீட்டோலையார் வாசீர்
மரம் என்றீர்.
மரம் என்றால் அத்தனை இழிவா?

பக்கத்தில் யார் அது பாரதியா!

பாஞ்சாலி படிக்காத பாமரனை
நெட்டை மரம் என்றீர்.
மரம் என்றால் அவ்வளவு கேவலமா?

மரம் ~~க~~ சிருஷ்டியில் ஒரு சித்திரம்
பூமியின் ஆச்சர்ய குறி!
நினைக்க நினைக்க நெஞ்சு
ஊறும் அனுபவம்.

விண்மீனுக்குத் தூண்டில் போடும் கிளைகளும்
எந்நேரமும் சிரிப்பை ஊற்றி வைத்த இலைகளும்
உயிர் ஒழுகும் மலர்களும் கொண்டது.

மரம் தளிர்க்கும் வரை பூப்பூக்கும்

கனிக்கும் வரை காய்காய்க்கும்.

மரத்தை வெட்டி நட்டால்

கிளை மரமாகும்.

மனிதனை வெட்டி நட்டால்

கரம் உடலாகுமா ?

நம் தேவைகளில் எல்லாம்

மரம் தருகின்றன.

ஆனால், நாம் அவற்றின்

சோலைகளை எல்லாம் அழிக்கின்றோம்.

மரங்களை அழித்து நிலங்களை வளர்த்து

நாம் உழைத்து ஒரு பயனும் இல்லை.

நிழல் தந்த மரங்களை நாம் மறந்தோம்
அதனால் தான் . இன்று.
அனல் வீச அதில் நாம்
வெந்துகொண்டிருக்கிறோம்.

மரம்

உயர்ந்த மரங்கள் எல்லாம்
உறுதியை தருகின்றன,
கனிந்த மரங்கள் எல்லாம்
கனாங்களை காட்டுகின்றன.

எத்திசையிலும் காற்றின்
கிளைகள் அசையும்
அதனை பார்த்த நம்
மனம் அசையும்.

வாசம் அள்ளி தரும் மண்

வாசம் வீச மழை, வாங்கி வரும்.

உன் தாகம் தீர்க்க

நீர் அவசியம்

உன் தேகம் மறைக்க

உடை அவசியம்

இவை எல்லாம் பெற

மரம் மிக அவசியம்.

# இரண்டாம் பரிசு

பெயர் : உ. ஹரிணி

வகுப்பு : BBA-II

தலைப்பு : ஆசிரியர்

முதல்முதலாய் பள்ளி வாசல், கண்களில் கண்ணீரோடு
நீ ஆசையாய் என்னை அள்ளி எடுத்து அரவணைத்து
சுவாசப்படுத்தினாய் !

அந்த கதகதப்பு, பாசம், நேசம், இன்னும் இருக்கிறது
நெஞ்சினில் அழியாமல் அம்மாவிற்கு இணையாய்
வந்தேன்.

அரும்பு வயதிலிருந்து குறும்பு வயதிற்கு தாவல் விடலை
பருவம்.... தவறுகளுக்கு குறைவைக்கவில்லை.... முட்டி போட
வைத்து தண்டித்தாய். அந்த வலி இன்னும் இருக்கிறது.
தவறு செய்ய விடாமல் தடுக்கிறது.

அரும்பு மீசை வயதில் ஏனோ நீ சொன்னதெல்லாம்
வீராப்பாகவே தெரிந்தது. மெல்ல மெல்ல நான் வளர
சின்னஞ்சிறு கூட்டுக்குள்ளிருந்து உடைத்து வெளிவர
பரந்து விரிந்த உலகை நீ காட்டினாய்.

நாளைய இந்தியாவை நீ தினம் தினம் செதுக்கையில்
சிற்பியாய் தெரிகிறாய். தோல்வியில் நான் துவழ
தோளில் சாய்த்து எனை தேற்றும்போது தாயாய்
தெரிகிறாய்.

மீண்டும் தாயை நினைவு படுத்தினாய்! எப்போது தெரியுமா? வகுப்புகளின் கடைசி இருக்கையில் தூங்… தாலாட்டில் இருக்கை படுக்கையானபோது.... ஆழ்ந்… உறக்கம்... சட்டென திடுகிடுக்கம்.... விழித்தால் தா… தெரிந்தது என் எதிரே அர்ச்சனைகளின் ஆரம்பமென…

தங்களை பிரியும் போதெல்லாம் கண்களில் ரணக… தூர தேசத்திலோ எதிர்பாரா சந்திப்பிலோ எங்கள் உயர்ந்த நிலைக்கண்டு நல்ல குடிமக்களாய் பார்க்கை… உங்கள் கண்களில் எத்தனை குதூகலம்

இயவனிடம் களிமண் பானையாகிறது உங்களிடம் நாங்கள் மனிதர்களாகிறோம்... மாதா பிதா குரு தெய்…

அர்த்தம் விளங்கவில்லை வெகுநாள், புரிந்தபோது தெரிந்தது. மாதா பிதா குரு மூவரும் தெய்வமென.

எத்தனை எத்தனை முகங்களடா ...இருந்தும் எத்தனை எத்தனை அமைதியடா. தாய் தந்தையர் தந்தது உயிர், நீ தந்தது உணர்ச்சி....

மனிதனை நாகரீகமாக்கும் மகான்களே!

வீரவணக்கங்கள்.....

# மூன்றாம் பரிசு

# ஆசிரியர்

பூ. சாருபாலா
I BSc Maths

உயிரெழுத்தும் மெய்யெழுத்தும்
கற்றுத்தந்தவன் நீதான்...
உலகத்தை நானறிய
வழிச்சொன்னவன் நீதான்...
பாட புத்தகம் சுமந்து வந்து
பாடம் கற்றுச் சென்றாலும்...
புத்தகம் சொல்லாத மதியெல்லாம்
என் புத்திக்குச் சொன்னவன் நீதான்...
வள்ளுவனை அறிமுகம் செய்தாய்...
பாரதியின் கவிதை சொன்னாய்...
ஆத்திச்சூடிகள் அனைத்தும் சொன்னாய்...
அறநெறிகளை என்னுள் விதைத்தாய்...
ஏதும் அறியாதவனாய்
உன் வாசல் வந்தவன் நான்...
என்னை செதுக்கி சிலையாக்கி
சிகரம் ஏற்றி வைத்தாய்...
திரும்பிப் பார்க்கையில்
அதே வகுப்பறையில்
அதே கரும்பலகையின் தூசுதட்டி
பாடம் நடத்திக் கொண்டிருக்கிறாய்...

காலத்தை புரட்டிப்போட
வாய்ப்பொன்று கிடைத்தால்,
இந்த பள்ளிக்கூட காலம் வந்து
உன் வகுப்பறையில் நானமர வேண்டும்...
இந்த முறையாவது
மட்டம் போடாமலும்
குட்டுப்படாமலும்
பாடம் கற்க வேண்டும்...

தமிழ்த் துறை

கவியரங்கம்

பெயர் : பிரவீனா. நா

வகுப்பு : மூன்றாம் ஆண்டு கணிதவியல் துறை

தலைப்பு : 1. ஆசிரியர்
(எங்கள் சாதனையில் ஒளிவிளக்காய்!..)

2. மரம்
(மரத்தின் துயரம் !..)

நாள் : 28.08.2019

இடம் : MCA கருத்தரங்கம் அறை
அன்னை கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
கோவிலாச்சேரி.

ஆசிரியர்

## எங்கள் சாதனையின் ஒளிவிளக்காய்!...

கற்றது கைமண்ணளவு கல்லாதது உலகளவு என்ற
கலைமகளும் திண்ணையில் புத்தகக்கட்டினை ஏந்தியவளாய்
கல்வி என்ற வார்த்தையை உச்சரிக்கும் போதெல்லாம்
கவிதைகூட இவரது பெயரை உச்சரிக்க ஏங்கிவிடும்
புன்னகைபோல் பூமியில் பிறப்பெடுத்து
புத்தக விரும்பியாய் டாக்டர். இராதா கிருஷ்ணன்

இன்னிசை பாடும் பறவையின் பாதியில்
இலக்கியவாதியாக உலகிற்கு திகழ்ந்து
கீதாஞ்சலியை உலகிற்கு அளித்த
கீதாஞ்சலி நாயகன் ரவீந்திரநாத் தாகூர்

புவியீர்ப்பு விசை மற்றும் ஈர்ப்பு விசைபற்றி
புவியாராய்ச்சி மேற்கொண்ட விஞ்ஞானி
ஐம்பூதங்களையும் பற்றி அறிந்தவனாய்
ஐசக் நியூட்டன் பல கோட்பாடுகளை வெளியிட்டார்

சார்புத்துவக் கோட்பாடுகளை கண்டறிந்து
சாதனை படைத்தவனாய் ஆல்பர்ட் ஐன்ஸ்டீன்

சூரியனை மையமாகக் கொண்டு
சூரியக்குடும்பம் இயக்கம் கொள்கிறது
என்பதை உலகிற்கு வெளியிட்ட கலிலியோ
என்றும் அவர் சாதனையால் நம் நினைவில்

இவர்களெல்லாம் சாதனையாளர் என்பதைவிட
இவர்களெல்லாம் தம் வாழ்க்கையை
பேராசிரியராகவே துவங்கினார் என்று அறிவதில்
பெருமைக் கொண்டு பூரிப்பு அடைகிறேன்

இவர்கள் மட்டுமின்றி இவ்வுலகத்தில்
இவர்களைப் போன்று பல்லாயிரக்கணக்கானவர்
எதிர்காலத் தூண்களை ஆதரிக்கும் ஆசிரியர்
என்றும் எங்கள் சாதனையின் குளிவிளக்காய்!.

மரம்

மரத்தின் துயரம்!..

மழை, நிழல் மட்டுமல்ல...

பறவைகளுக்கு வசிப்பிடமும் கால்நடைகளுக்கு
- தழையும்
மனிதர்களுக்கு சகலமும் தருகிறேன்!
மண்ணரிப்பையும் தடுக்கிறேன்!

இப்படி
எல்லோருக்கும் எல்லாமும் தரும் என்னை
ஏன் வெட்டுகிறீர்கள் என்று புரியவில்லை!

ஒவ்வொரு ஆண்டும்,
புயல், மழை போன்ற
இயற்கை சீற்றங்களால் அழிந்துவிடுகிறேன்!
அதை மாற்ற முடியாது!

என் பயன் அறியாது
சில மனிதர்கள் போராட்டம்
என்ற பெயரில் என்னை
வெட்டிச் சாய்க்கின்றனர்.

இப்படி தினந்தோறும்
நான் அழிக்கப்படுவதால்
சுற்றுப்புறச் சூழல் பாதிப்படைகிறது!.

வெப்பச்சலனம் ஏற்படுகிறது!
மழைப்பொழிவு குறைகிறது!

இதற்கு எல்லாம் யார் காரணம்?
நீங்கள் தானே!..

இப்படி என்னைப் பற்றி சொல்ல
இன்னும் நிறைய இருக்கிறது
இதையெல்லாம் சொல்வது யாராக இருக்கலாம்!.
என்று நீங்கள் யோசிக்கலாம்

ஆம் நான் தான் மரம் பேசுகிறேன்

என் கண்ணீர் துளிகள்
உங்கள் கண்ணுக்கு தென்படவில்லை

எனவே கவிதையால்
என் துயரத்தை சொல்கிறேன்

என்னை காப்பாற்ற
நடவடிக்கை எடுக்கலாமே!..

பெயர் : கா. கீர்த்திகா

கவிதை : ஆசிரியர்

வகுப்பு : இளங்கலை இலக்கியம் மூன்றாமாண்

கல்லூரி : அன்னை கலை மற்றும் அறிவியல் கல்லூரி.

ஆசிரியரே

ஓர் சிறந்த வழிகாட்டி

ஆசிரியர்

மாணவனுக்கு நல்ல ஆசான்

ஆசிரியர்

மாணவனுக்கு நல்ல நண்பன்

ஆசிரியர் மாணவருக்கு

துணைபுரியும் நல்ல வழிகாட்டி

ஆசிரியரே

ஓர் சிறந்த புத்தகம்

ஆசிரியர்

நல்ல மாமனிதராகத் திகழ்பவர்

ஆசிரியர் மாணவரை

நல்வழிக்கு கொண்டு செல்பவர்

ஆசிரியருக்கும் மாணவருக்கு

இடையே உள்ள உறவு நட்பாகும்.

# மரம்

பணகாரனோ ஏழையோ

அவனை பாசத்தில் அரவணைத்தது நீ

உறங்கும் போது

தோள் கொடுத்தாய் தோழியாய்

தவழும் போது நீ வந்தாய்

தாயாய்

நான் பார்க்கும் இடம் எல்லாம்

உன் திரு உருவம்

நீ என்னை இறைவனா

நான் உறங்கும் போதும்

என் கூட இருந்தாய்

நான் இறுதியில் உறங்கும்

போதும் நீ என் உடன் வருகிறாய்

நீ என்ன என்

உயிர் தோழியா!

# பள்ளி ஆசிரியர்

பள்ளி என்னும் சோலையில்
பசுமையாய் நிறைந்த என் வாழை நீ

கல்வி என்னும் வானிலே
விடியற் காலையில் வரும் சூரியன் நீ

உன் அருகில் இருந்தேன்
ஈடு இல்லை உன்னை விட

பிரிந்தேன் மனம் மகிழவில்லை

ஏன் என்று தெரியவில்லை

காரணம் கூறுவாயோ

என் இனிய ஆசானே!

M. Kayalvizhi
மு. கயல்விழி I year microbiology (B.S
I BSc Microbiology [redacted]
கவிதை
மழை, ஆசிரியர், மரம், Annai College:

## மழை

மழையே மழையே உன்னை
நான் வெறும் பனித்துளியாக
நினைத்தேன் ஆனால் என் மனதில்
நீ ஒரு கொட்டும் அருவியாக
வந்தாய்
கவலைகள் மறக்கும்
கனவுகள் கலைந்தும்
பழமையை மறக்கும்
உன்னை தேடி நான் வந்தேன்
எனக்காக நீ உருவாய தேனி
என் கண்களை இமைக்காமல்
கனவாய் உன்னை தேடுகிறேன்

அ. மோகனா ப்ரியா
முதலாம் ஆண்டு நுண்ணுயி
-யல்



## மழை...

மழையே என் மழையே!
உன்னை எதிர்பார்க்கிறேன் நானே!
நீ வர வேண்டும் என்று - நட்டு
வைத்தேனே சின்னஞ்சிறுச் செடிகளை...
எங்கே சென்றாய் நீ எங்கேதான் சென்றாய் நீ!
நீ வருவதற்கு முன் அந்த - வானம்
தோன்றும் ஒரு வண்ண வானவில்
நீ வரும்போது மண் மணம் தோன்றும்
அதனாலோ என்னவோ என் மனம் ஏங்கும்
நீ வரவேண்டும் என்று! மழையே நீ வர
வேண்டும் என்று
மழையே நீ வரும்போதெல்லாம் - இவ்வுலகமே
குளிர்ந்திடும் குளங்களோ நிறைந்திடும்!
விளைநிலங்களோ விளைந்திடும்....
உன் அன்பினால் தீர்ந்திடும் தண்ணீர் பஞ்சம்
உன் கோபத்தால் அழிந்திடும் மக்களின்
பிரபஞ்சம்!
மழையே என் மழையே....

# மழை

மு. அபிநயா
முதலாமாண்டு கணித
- வியல் துறை

மழை.....
இருண்ட மேகத்தின்
இடிப்புவலியில்
இடிமின்னலிடை பிறந்து...
வானம் வழியனுப்பி வைத்த
மேகத்தின் மகள்...!
வறண்ட நிலத்தோடு
வாக்கப்பட்டாலும்
வளம் செழிக்கச் செய்ய
பூமிக்குப் புகுந்த மகள்...!
வாழவந்தவள்...
வாழவைத்தாள்...
காதலற்ற பூமிக்கணவனின்
கற்றோர் சொத்தாய்
மரங்களை சேர்க்கவில்லையாம்...
கடிக் கொண்டே மறுக்கிறான்...!
இருப்பினும்...
அவ்வப்போது இரக்கத்தால்
விதைகளோடு உறவாடும்
தாகத்தோடு
வறண்டிட்ட விதைக்கு
கொண்டாடுகிறது...
விவசாய நிலத்தில்
நீராக...!
விவசாயி வயிற்றில்
பாலாக...!

# மழை

ஒரு
தொடர்மழைக் காலத்தின்
முதல் நாளில்
விடியல் வெளிச்சம்
மறைந்தோடிவரும்
கார்மேகக் கூட்டங்களின்
கன்னி மழையில்
ஊரே நனைந்து கொண்டிருக்க....
அம்மழையின் இடையே மிதந்துக்கொண்டு
சிறு கப்பல் போல்
மிதந்து போகும் ஒரு சிற்றுந்தின்
முகப்புக் கண்ணாடியில்
தெரிந்து விழும்
மாரி முத்துக்களின்
குளிர்ச்சி தாளாது
உள்ளுறையும் காற்றுப் புகைத்தை
தன்னிரு பிஞ்சுக்கைகளால்
அப்பி விளையாடும்
ஐந்தாறு
புன்னகைச் சிறு குழந்தைகளின்
பெருமகிழ்ச்சியில்
பிறக்கின்றதொரு நன்மழைக்காலம்!

து. சரண்

முதல் இளங்கலை கணிதவியல்

# மழை

வானிலே அலைமோதும் மேகக்கூட்டமாய்
பூமி நோக்கி நீ வருகையில் இடிமின்னல்
எனும் வாண வேடிக்கையாய்
மலைகளிலே அருவிக் கடலாய்
வறண்ட நிலத்தின் தாகம் தீர்க்கும் புனலாய்
நதி வழியே வாய்க்கால் வழியோடி
உயிரினங்கள் தழைத்தோங்க
நீர் எனும் ஆதாரமாய்
மனித குல மாணிக்கமாய்
அவ்வப்போது ஆர்ப்பரிக்கும் வெள்ளமாய்
மானிடரின் தேவை உணர்ந்தும் நீ
பூமியின் உயிராய் சுருங்கச் சொல்லின்
நீரின்றி அமையாது உலகு
என்ற பெருமையின் அடையாளம் நீயே....

இரா. பேபி அட்சயா
I BSC Maths.

# ஆசிரியர்

என் அறியாமை எனும் இருளை நீக்கிய
அறிவுச்சுடர் என் ஆசான் .

நாட்டின் தூண்கள் மாணவர்கள் என்றால்
அவர்களின் வலிமையான அடித்தளம்
ஆசிரியர்கள் அவர் .

ஒரு மனிதன் இருமுறைச் சுமக்கப்படுகிறான் ;
ஒன்று "அன்னையின் கருவறை"
மற்றொன்று "ஆசிரியரின் வகுப்பறை"

மாணவர்களே ! ஆசிரியர்களின் இன்றைய பயிற்சி
மாணவர்களின் நாளைய வளர்ச்சி
ஒரு நல்ல சமூகத்தின் வளர்ச்சி
நல்லாசிரியர்களிடம் உள்ளது.

கல்லையும் சிலையாக செதுக்கும் சிற்பிபோல
சாதாரண மாணவர்களின் திறமையை அறிந்து
சாதனை மாணவர்களாக செதுக்கும் ஆசான்களுக்கு
இக்கவிதை சமர்ப்பணம் ..............

# மரம் 

இரா. பேபி அம்சமா
I BSC Maths.

கதை கேளு கதை கேளு
ஓடி ஆடி விளையாடி நாங்க
ஓஞ்சு போன கதை கேளு..........

ஊஞ்சல் கட்டி தான் ஆடின
எங்க மாமரத்தை காணலை
அது யாருவீட்டு நாற்காலியா
இப்ப போனதுன்னு எனக்கு
தெரியலை.....

போட்டி போட்டு எலந்த பழம்
நாங்க பொறுக்கி எடுத்து
தின்னாமே அந்த எலந்த
மரம் போன இடம் ஏது தெரியலை?

கொய்யா பழம் கொத்த
கூடு வச்ச கிளி கூட்டம்
குடும்பத்தோட காணலை
கொய்யா மரமும் இப்ப இல்லை.

அண்ணன் சொன்னல நான் ஏறி
முந்திரி பழமும் தான் பறிச்சேனே
முந்திரி மரம் இருந்த இடம் இப்ப
மொட்டைக்காடாதான் கெடைச்சிருக்கே...

விழுது பிடிச்ச விளையாடின
ஆலமரத்தையும் காணல
அங்க பாடித் திரியும்
பல பறவைகளும் காணல......

அதுவும் தப்பிருச்ச எங்க ஊரு
அரசமரம்
அதுக்கு பிள்ளையாரு தான் காரணமோ
இனி நட்டு வைக்கும் மரத்தடியில்
பிள்ளையாரத்தான் வச்சிடனுமோ?

பெயர் : ரா. ராகுல்

துறை : மூன்றாம் ஆண்டு கணிதவியல் துறை

தலைப்பு : மழை

# மனமு

ஏதோ ஒரு வட்டம்
மலை போல ஒரு கூட்டம்
புரியாத பந்தயம் அது.

வேஷம் செயற்கை வெளிச்சம்
வெறுமையான பார்வைகள்
எதையும் சொல்லாத
ஊமைக் கண்கள் அவை

போலிச் சிரிப்புகளும்
பொய்ச் சாதனைகளும்
எதுவுமே தீர்க்கவருவதில்லை.

மண்வாசமும் மழை நேசமும்
மீண்டும் வரும் தூரலில்
மீண்டும் வரும்
வெயில் பெற்ற கண்களும்
மழையோடு மழை சேர்க்க
மனம் கரைக்கிறது
தூக்கி வந்த
சுமைகளை சுகமாய்
மெய்யென பெய்யாதோ
இப் பெருமழை...

க. மணிகண்டன்
முதல் இளங்கலை கணிதவியல்

# மரம்

பச்சை நிறப் பட்டாடைக் கொண்டு
மாவீராய் பரந்து விரிந்து
காற்றிலே அசைந்தாடும் கனவு
பள்ளிக்கூட வகுப்பறையாய்
பறவைகளின் உறைவிடமாய்
பசியோடு வருவோர்க்கும்
பசிதீர்க்கும் வீடாவாய்
அசதியோடு வருவோர்க்கும்
இளைப்பாறும் நிழலாவாய்
உயிர் மூச்சுக் காற்றை
உருவாக்கும் இயந்திரமாய்
ஆகாய மழைத்துளியை அள்ளி
அள்ளி கொடுக்கின்றாய்
இலையுதிர்த்த காலத்தில்
சோகம் கீதம் பாடுகிறாய்
மனித பண்பில்லாதவரை
மரம் என்றான் வள்ளுவன்
அறம் கொண்டு உரையருக்கும்

விஜயசாந்தி . இ
II - பி.எஸ்.சி (கணிதம்)

தலைப்பு : ஆசிரியர்.

அன்பு என்றால் தாய் தந்தை
அறிவு என்றால் குருநாதன்
என் ஆசிரியர்.

அம்மாவின் அடுத்த உருவம்
அப்பாவின் அடுத்த உருவம்
நண்பனின் அடுத்த உருவம்
தோழியின் அடுத்த உருவமா
ஆசிரியர்....

ஆசிரியராக இருக்க தவம்
புரிதல் வேண்டும் மிருக்குமே
அலைபாயும் உலகில், நம்மை
அடக்கும் திறன் உள்ளவர்
ஆசிரியர்....

எனக்கென்ன தெரியும் என்பதை
நான் அறிய
உனக்கென்ன உன்னால் முடியும்
என்பார்.

ஆயிரம் புத்தகங்கள்
ஒரு ஆசிரியருக்கு சமம் ஆமாம்
ஆயிரம் புத்தகங்கள் தரவில்லை - நமக்
அனுபவ பாடத்தை நமக்கு அளித்தன

வீடுக்குள் அடங்கி கிடக்கும் நம்மை
ஒரு லச்சிய வழிக்கள் செல்ல வைக்கும்
நிலை - காரணம் பல பல செல்லாம்
அதில் மேலக்காரணம், அந்த லட்சியத்திற்க்
பாதையாக அமைவது நம் பெற்றோர்
கைப்பிடித்து வழிக்காட்டுவது, ஆசிரியர்

ஒரு மாணவன் தீய வழியில் செல்கிறான்
என்றால், காரணம் ஆசிரியராம்.
அதே மாணவன் நல் வழியில் செல்கிறான்
என்றால், காரணம் ஆசிரியராம்
இதற்க்கு யார் காரணமா?
சிந்தித்து பாருங்கள்....

மழை பல பொழிய, நதியில் நீர்
பெருக்கு எடுத்து ஓடும்.
தடுக்க அணைகள் இல்லை என்றால்
பல சேதங்கள் நேரிடும்

அணைகள் போல் ஆசிரியர்
நதியை போல் மாணவர்கள்
சிந்தியுங்கள்....
சற்று ஆழ்ந்து சிந்தியுங்கள்...

எங்களின் வெற்றியில் சந்தோஷம்
காண்பவர்....
தோல்வியில் கூட ஒரு துணையாக
நிற்பார்

யாருடனும் நீ வீணாக எதிர்த்து நிற்காதே
உன் பயத்தை எதிர்த்து நில் என்பார்
தப்பு என்றால் தட்டிக்கேட்க தயங்காதே
என்பார்

வானம் நீலமாக இருக்கும்பொழுது
ஜொலிப்பதில்லை
கருத்து இருக்கும் பொழுது தான்
வைர மழை பொழிகிறது
அதுபோல் தான் எங்களை
அறிவாளியாக இருந்தாலும்
ஒழுக்க என்னும் ஒளியை
நமக்குள் ஊட்டினார் ஆசிரியரே...

அழவும் குழந்தையை தாய் அறிவார்
மனதில் குழப்பம் உள்ள
மாணவனை ஆசிரியர் அறிவார்.
ஆறுதல் மொழி பேசுவார்

என் மாணவன் என்று சொல்லிக்கொ
பெருமை படும்
இன்னொரு தந்தையன்றோ

சம்பளத்திற்காக வேலை செய்கிறார்
என்று கூறினால்
அது முட்டாளின் வேதமாகும்
அவர் வெறும் பாடத்தை மட்டும்
போதிக்கலாமே
ஆனால் அவர் வாழ்க்கையே
அல்லவா போதிக்கிறார்...

பைந்தமிழ் கவியரங்கம்

பெயர் : இரா. மதுபாலா.

வகுப்பு : ஆங்கிலத்துறை, மூன்றாம் ஆண்டு.

## மரம்

# மரம்

தொடாத உயரத்தில்
நீ இருந்தாலும் கூட
உன்னை தொட்டு செல்லும்
காற்றிற்கு நடனமாடுகிறாய்
உன்னை தொட்டு பார்க்க
அருகே வருகையால்
சலசலவென சத்தம் போடுகிறாய்.

பொழுது போக்கிற்கு உன்னிடம்
பேசியதெல்லாம் என் பொறுமைப் போக்க
அனைத்திற்கு உன் நிழல்
தூங்கின குருவிகளுக்கு இடம் கொடுக்கிறா

தூங்கா குழவியின் திமிறல்
புண்ணாய் ஒருக்க நினைத்தாலு
உன் கத்தி போன்ற கருக்கிகளை
வைத்து தொடாத அளவிற்கு
செய்கிறாய், வெயில் நேரங்க
உன்னை காண வந்தால்
தீமூற்றி மறுபடியும் செல்லும்
உன் முனைகளை உரசி
பயமுறுத்துகிறாய்.

உன்னிடம் உள்ள காய்க
மெருகும் அருந்தும் போது
இவ்வுலகில் இதற்கு ஈடான
உணவு ஏதுவும் இல்லை என்று
உணர வைக்கிறாய்.

காய்களை அறுந்திய பின்பும்

இரு சக்கரங்களில் கொண்ட

பெரிய உண்ற கிராமங்களில்

என்றால் நீ கொடுத்த

என் பணைவண்டிதான்.

உன் ஓலைகளைக் கொண்டு

காத்தாடி செய்து காற்றாலைப்

போல் உன்னையே சுற்றி வருவேன்

நான்! அது மழையில்லை.

என் முன்னோர்கள் எழுதியது.

- கி காகிதமாய், ஓலைச் சுவடிகளாய்

உன் இதழ்களை நீ அர்ப்பணித்தாய்.

பின்பு.

உன் பணம்பழத்தின் வாசனைக்கு

எவ்வளவு பணங்களை கொடு

கொடுத்தாலும் ஈடாகாது என்று

புரியவைக்கிறாய்.

பழங்களை உண்ட பின்பும்

உன் விதைகளை புதைத்து

பணங்கிழங்கினை எனக்கு பரிசாக

கொடுக்கிறாய்.

எத்தனை விளக்கின் வந்தாலு

உன் சொக்கைகளுக்கு ஈடா

விளக்கினையும் என் சந்தோஷங்க

-யும் எங்கே சென்று தேடு

சொல் ??

நீ நிறையும் உறங்கவில்லை
என் மனதை விட்டு என்றும்
நீங்கவும் இல்லை.

முடிந்தஅளவிற்கு ஒரு மரமாவது
வளருங்கள். அது பனைமரமாக இருக்கட்டும்.
என்றும் இழந்த நினைவுகளுடன்
குருவிகள்.
உன் ஜீமறன்

பைந்தமிழ் கவியரங்கம்

பெயர் : இரா. மதுபாலா.

வகுப்பு : மூன்றாம் ஆண்டு

துறை : ஆங்கிலத்துறை.

ஆசிரியர்

# ஆசிரியர்

என் முதல் ஆசிரியர் என் அம்மா

அன்னை என்னிடம்

பிறக்கும் பொழுது

நீ அழுத அழுகையை

உன்னை நினைக்கும்

பொழுது என் கண்கள்

கலங்குதே என் கண்மணி

ஒவ்வொரு தடவையும் என்

முன்னால் மண்டியிடு

முன்னேற நான் கடக்கும்

ரணங்கள் உன்னால்

ஏறலாம், பின்பு என்னை விடு

தாய் தொடங்கும் முதல்படி

உந்தன் கல்யாணி.

என் அன்னையின் ஆசிரியர்கள்,

சாதனையின் சிகரம்

உன்னை அழைத்து இது

உனக்கான முதல்படி

என்றாய் நீயோ எனக்கு

கற்றலே முதல்படி என்றாய்.

எத்தனையோ சோதனைகளை

நீ தள்ளிவைத்து கல்விக்கென்று

தோழனாய்,

மண் வாசனையையும்

மழையும் ரசி என்ற போதும்

என் ருசி எல்லாம் என்

புத்தகம் தான், என்றாய்,

தினம் தினம் உன் கனம்
எனக்கு பெரிது என்றால்
என் மனம் ஒருவரும் என்
பேராசிரியர்கள் என்றாய்
ஒரு கனம் நான் சொல்வதை
கேள் என்றேன் எனக்கு
ஏற்கனவே உன் மனம் புரிந்தது
என்றாய் இருந்தாலும் யார்
காரணம் என்றேன்

கருணை சொல்லிக் கொடுத்ததும்
அவள்.

ல் வாழ்க்கையை பற்றி தெரியதும்
அவள்.

தனாக நேரத்தை செலவழிக்கவை

அதாவது ஒரு புத்தகத்தை எடுத்து

படி என்றதும் அவள்,

அவள் யார் என்று சொல்,

என் அன்னையின் ~~[illegible]~~ வழவழ

<u>கல்வி</u>

# பைந்தமிழ் கவியரங்கம்

பெயர்: இரா. மதுபாலா.

வகுப்பு: மூன்றாம் ஆண்டு

துறை: ஆங்கிலத்துறை.

மது

# மழை

நீரின்றி நீயும் இல்லை
நானும் இல்லை
மழையின்றி நீரும், வேறும் இல்லை

வறண்ட தேசமாய்
என் கண்கள் இருந்தாலும்,
என் கண்ணீரும் ஒரு கதைசொல்லும்

நிலமாக இருந்தாலும் ஒரு சொந்தம்
என்றால் நீர் மட்டும் தான்.
பூமிக்கு தன்னை காயப்படுத்தி பெய்கி
கொடுத்த ஒரு உன்னத
உணர்வே நீராகும்.
மேகமாக தன்னை எழ
இறைப்பவர்க்கு கொட்ட கொடுப்பதே

மழை என்ற மழைநீராகும்.

பூக்களை தேக்கும் சில நீர்க்குட

குறை குடி சிறு பயிரை வளர்க்கும்

இன்று உனக்காக

நாங்கள் தேடாத இடமும் இல்லை

ஏறாத மரமும் இல்லை!

கண்ணுக்கு தெரியாத கள்வர்களை

சண்டை போடுகிறோம். உன்னை கொ

கொண்டுவர!

தேடி திரியும் எங்களுக்கு நான்

அறிவேன் உயிருக்கு இணை

மழைநீர் என்று!

நீ வரும் வேளையில்

கண்களுக்கு மழையும் கண்ணீரல்ல

இவ்வுலகில் உள்ள விவசாயிகளின்
ஆனந்தக் கண்ணீராகும்.

வற்றாத நதி என்றும் சொல்லக்கூடிய
ஒரு அதிசயமே வைநீராகும்.

# மரம்

இரா. அனிதா.
பி.ஏ ஆங்கிலம்
(3ம் ஆண்டு)

உலகத்து மரங்கள் எல்லாம்
உறங்களாக விட்டது.

அங்காங்கே ஒற்றை மரம்
அனாதையாக்கப் பட்டது.

வெண்ணிலவில் காற்றை செலுத்தி
விதைகூட ஆசைப்பட்டாய்

மண்ணுலகை மடிந்துப் போகும்
காற்றை பேணமறந்து விட்டாய்.

பிராணவாயும் அத்தனையும்
கரிமவாயு ஆகுதுபார்.

கண்ணறியா காற்றுகூட
கண்ணுக்கு தெரியுதுபார்.

காடுகளை நீ அழித்து
கட்டடங்களை எழுப்பினாய்.
அழுகின்ற நிலைமை கூட
தொழுதுபார்த்து சிரித்து விட்டாய்,
அழுக்காத்த அழுகையும்
அழுகையாவதை அறியாயா?
விஞ்ஞான அறிவுக்கு
விஞ்ஞானம் புரியாயா.
மூச்சி விடும் காற்றுக்கூட
விலைக்கு வாங்கும் நாள் வரும்.
எம்மனிதா அன்று தானே
உமக்கு எல்லாம் புத்தி வரும்.

செ. பூர்ணிமா
I st BLIT தமிழ்

கவிதைகள்

## மழை

வானத்தின் தோரணையில் ஏதோ ஒரு
மாறுதல் போல் இன்று....
கருமேகங்கள் புடை சூழ
விண்ணுலகை இருளில் மூழ்க செய்யும் முயற்சியோ இது?

இதோ ஒளியும் ஒலியும் இணைந்து
பூமியில் மீண்டும் ஒரு பாரத யுத்தம்
நடப்பதை போன்ற உணர்வை தருகின்றன.

பிறகு என்ன? சற்று நேரம் தான் தாமதம்
என்மேனியில் மண்ணில் விழுந்த
இருதுளி நீர்த்துளிகள் சிதறுவதற்குள்ளே
படபடவென பட்டாசுபோல
ஆங்கும் இங்குமாக
குறுக்கும் நெடுக்குமாக வெடித்து சிதறி
வெடித்து
என்னை முழுவதும் அதன்பால் சரணடைய செய்த

இந்த மழைத்துளிகளின் கொஞ்சல்களில்
நான் கொஞ்ச நேரம் மூழ்கி திளைத்து
மனம் குளிர்ந்து அகம் மகிழ்ந்து தான் போனேன்.

சு.சுகி
B.Lit 1

# மழை கவிதை

கார்மேக தோட்டத்தில் பூத்த
கண்ணாடிப் பூவே!
காற்றில் பறந்து
என் மீது விழுவதேனோ!!

உன்னை ரசிக்க தெரிந்த என்னை
உரசி பார்க்க வந்தாயா!
தொட்டு சென்ற நீ - உன்
குளிர்ச்சியை மட்டும் விட்டு சென்றதேனோ!!

உன் வருகைக்கு முன்னே
குளிர் காற்றை அனுப்பி!
மண் மட்டும் அல்ல என்
மனங்களையும் குளிர்வடைய செய்தாய்!!

பூமிக்கு நீ தந்த வருகையால்
மலர்ந்தது மலர்கள் மட்டும் அல்ல
என் மனமும் தான்!!

மழையே உன் வருகையால்
என்னற்ற எண்ணங்கள் என்னுள்
ஓடமாய் பெருக்கெடுத்து ஓடுகிறது!!

இடை கொண்டு

உன்னை தடுக்க விரும்பாமல்!
கை விரித்து தலை உயர்த்தி
உன்னை ரசிக்கிறேன்!!

ஊசி போல் நீ வந்தாலும்!
என்னுள் வலி ஏதும் தராமல் இறங்கினாய்!!
என்னில் கறையாய் படிந்த
கவலைகளை!
மழையாய் வந்து நீ
நீக்கி சென்றாய்!!

விண்ணுக்கும் மண்ணுக்கும் இடையே!
தூதுவனாய் வந்து போகிறாய்!!

நீரின்றி அமையாத இவ்வுலகில்
இங்கு அனைத்தும்
நீ இன்றி அமையாது!!

*——*——*——*——*——

## ஆசிரியர் கவிதை

பா. இலக்கியா
I B.Lit

அன்னையும் பிதாவும்
முன்ன வர தெய்வத்தை
பின் தள்ளிய என் ஆசானே
கார்க்கு பள்ளியாய்
காலங்கள் கடந்தாலும்
தூரலாய் என் நெஞ்சில்
உங்களின் சாரல்!

ஆசிரியர்கள் தான் ஏணம்
அப்பொழுது
அவர்கள் தான் ஏணிப்படிகள்
புரிகிறது இப்பொழுது!

சூரியன் ஒரு நாளும்

பலனை பூமியிடம்

எதிர் பார்ப்பதில்லை

மாணவர்களின் புகழை

ஒரு நாளும்

ஆசிரியர்கள் ஏற்பதில்லை.

உங்கள்

சிவப்பு மை பேனாக்களால்

எங்கள்

தலை எழுத்தை திருத்தி

பிரம்மாக்களே !

பா. இலக்கியா

தமிழ் இளங்கலை

மூன்றாம் ஆண்டு

* பெயர் : அ.அனுசுயா
* வகுப்பு : இரண்டாமாண்டு-கணிதவியல் துறை
* போட்டி : கவிதைப்போட்டி
* கல்லூரி : அன்னை- கலை மற்றும் அறிவியல் கல்லூரி கும்பகோணம்

S:No:2
18/8/19

# கவிதை – மழை, ஆசிரியர், மரம்

## மழை

* மழையில்
நனைந்துவிடாமல் இருக்க
முந்தானையில்
மூடினாள் தாய்!
மகனோ
நனைந்தான்
தாயின்
அன்பு மழையில்!

* மழையே, நீ சில வேளைகளில்
தென்றலாகிறாய் பல வேளைகளில்
சுனாமி ஆகிறாய்!
நீ மிதமானால் குடிநீராகிறாய்!
நீ அதிகரித்தால் வெள்ளப் பெருக்கெடுத்து
குடிக்கெடுக்கிறாய்! மழையே,
நீ சீரானால் எங்கள் தோழனாகிறாய்!
நீ சீறிப்பாய்ந்தால் எங்கள்
பகைவனாகிறாய்!
நீ சில வேளைகளில் முத்தமிட்டு,
பல வேளைகளில் மொத்தமாய்
எங்களை அள்ளிச் செல்கிறாய்! மழையே,
உனக்கு நாங்கள் கைக்கொடுக்கும்முன்

எங்கள் கரங்களை நீ கோபத்துடன்
கோரப்பிடிக்குள்ளாக்கிகிறாய்!
இருப்பினும் மழையே நீ வா....
எங்களை ஆர்ப்பரிக்க வா.... ஆதரிக்க வா!
வரவேற்கின்றோம் உன்னை!
சீராக வா. எங்களைச் சிதைக்காமல் வா!
உனக்கு சிவப்புக் கம்பளம் விரித்து
வரவேற்கிறோம்!

* மழைநீரை சேமிக்க வேண்டும்
என்கிறது அரசு
ஒரு ஏழைப்பெண்
மழை பெய்த போது
குடம், குடமாக சேகரித்தாள்
ஒழுகிய வீட்டில் இருந்து
மழைநீரை....

## ஆசிரியர்

* அறிவுரையைக் கூறி
என்னை அருமைப்படுத்தி
பாடங்கள் நடத்தி
அறிவைக் கூட்டி
நல்லவை கூறி
என்னைப்
பின்பற்ற வைத்து

தீயவை கூறி
என்னைக் கைவிட வைத்து,
என்னை நல்ல நிலைமைக்கு
உயர்த்த நினைக்கும்
என் ஆசிரியர்களுக்கு
நான் செய்கின்ற ஒரே நன்றி
காலம் உள்ளவரை
மறக்காமல் இருப்பதுதான்!

## மரம்

* சூரியனின் வெப்பம் தணிய
மழை வேண்டி
மரங்களுக்கு
உதிர்ந்த இலை கொண்டு
அர்ச்சனை செய்கிறது
காற்று!

* அனல் வீசும் வெயிலில்
ஆள் நடமாட்டம் இல்லை
ஒரே ஒரு இடத்தில் மட்டும்
ஒதுங்கினார்கள் மனிதர்கள்
இயற்கை வழங்கும் இலவச நிழல்
பரந்து விரிந்து நிற்கிறது
தாடி வளர்த்த ஆலமரம்!

பெயர் : திவ்யா.ரா

வகுப்பு : முதலாம் ஆண்டு உயர்த் தொழில்நுட்பம்

கல்லூரி : அன்னை கலை மற்றும் அறிவியல்
- கல்லூரி

கவிதை தலைப்பு : மரம்

தலைப்பு : மரம்

மரங்கள் எல்லாம் மண்ணின் கரங்கள்
மழையையும் அருள்பெற மகத்துவ வரங்கள்!
மறந்தும் வெட்டி மண்ணில் சாய்க்காதீர்
முடிந்தால் விதையிட்டு முயற்சியுற வளருங்கள்!
முடியாதோர் கைகட்டி மௌனமாய் வணங்குங்கள்
செடிகள் வளர்ந்தால் சிறப்பாய் மரமாகும்!
செழிப்புடன் வளர்ந்து வையாவுக்கு நிழலாகும்!

பச்சையால் அன்னையாய்ப் பழுத்து பசியாற்றும்
பசுமையாய்க் கண்ணுக்கு அற்புத விருந்தாகும்!
வாசியாய் வேர்க்கையால் தென்றலாய் வீசிடும்
வெட்டினாலும் மன்னித்துப் பலவாகப் பயன்தரும்!
மரமொரு நாட்டுக்குச் சமமாகும் தெரியுமா?
மரத்தினைக் காப்பதே மாபெரும் செல்வமாம்!
கிளைகளே மாநிலங்கள் இலைகளே மக்கள்
மரணமென்பது உதிர்ப்பது பிறப்பென்பது துளிர்ப்பது!

வேர்களே ஒற்றுமை காப்பதே கடமை
வேரின்றி மரமில்லை ஒற்றுமையன்றி உயர்வில்லை!
பார்க்கும் இடமெல்லாம் பசுமையே வேண்டும்
பாரில் அனைவரும் உணர்ந்திட வேண்டும்!

வளம்பல கொடுக்கும் மனடியானைப் பெறவே
வீட்டிற்கோர் மரத்தை விதைப்போம் நாமே!
வளர்ப்பதால் எல்லோரும் பயன்பெறுவோமே
வளருங்கள் அதன்பின் மனதார வாழ்த்துவோமே!

# மழை

சக்திவேல்
I B.Com (Regular)

* உன் சின்ன தூறலின் இசை கேட்டு
உன் செல்ல மழையின் குரல் கேட்டு!
ஆடுகிறேன் உன்னில் இன்று விழிகிறேன்

* மெல்ல மெல்ல கரைகிறேன்
நீ செல்ல செல்ல உறைகிறேன்!
ஏன் வந்தாய் ஏன் சென்றாய்
புரியவில்லை உன் இன்ப சாரலில் நனைகையில்!

* குடைக்குள் மழை
குடையுடன் வீதியில் அவள்!

* உன் சத்தம் கேட்க
நித்தம் ஏங்குகிறேன்!

M. Sathya. II - BC

# மழை

## மழை வெள்ளத்தை திட்டாதீர்கள்

(•) திருடப்பட்ட தன் ஏரிகளையும், குளங்களையும்...
அது தேடி அலைகிறது...
தன் இருப்பிடத்தை ஆக்கிரமித்து...
கட்டிடங்கள் கட்டியதால்...
சாலையில் இறங்கி மறியல் செய்கிறது...
நீ ஆகாயத்தில் பிறக்கிறாய்...
பூமியில் சிலிர்க்கிறாய்...
வானவில்லை தோன்ற...
வைக்கிறாய் தொன்றுதொட்டு...
எங்களை நேசிக்கிறாய்...
தொலை தூரத்தில் இருந்தாலும்...
என் மனம் குதிக்க வைக்கும்...
அழகான மழைத்துளியே...
நனைந்த வரவேற்பை விட...
வேறென்ன பெரிதாக...
தந்துவிட முடியும்...
ஏங்கித் தவித்த...
மழைக்கு...

மழை

R. Gowsalya II·BC

R கௌசல்யா

# மரம்

மரங்கள் இயற்கையின் வரங்கள்
பூமித்தாயின் ஆடைகள்
மழையின் ஆதாரம் தான்
மரங்களால் வாழ்ந்த நாம் இன்று மரங்களை
அழித்துகொண்டு இருக்கிறோம்
கல்லெறியும் கரங்களுக்கும் கனி தரும்
வெட்டும் மனிதனுக்கும் இளைப்பாற இடம் தரும்
நாம் வெட்டுவது மரங்களை அல்ல கொட்டும் மழையை
அடுத்த மாநிலங்களில் நீருக்காக போராடும் நாம்
கையோடு ஒரு மரம் நட்டு வைப்போம்
நாளை நம் பிள்ளைகள் போராடாமல் இருக்க
மரம் நடுவோம் மாற்றத்தை உருவாக்குவோம்
புத்தர் முதல் புல்லினம் வரை தேடியடைந்த
சத்திரமான சரணாலயம் நாங்களே
தண்ணீர் மழை சேகரித்து தந்துதவுதலில்
நடமாட வங்கிகள் நாங்களே
பறவைகளின் சங்கீதம் நித்தமும் ஒலித்திடும்
இலவச இசைசபாக்கள் நாங்களே
கல் எறியும் கரங்களுக்கு கனியுடன்
கனிதரும் கற்பக விருட்சம் நாங்களே!

ரே. மனிஷா
B. Lit - Tamil.

# மழை:...

மேகங்களின் உருவம் மழை துளியே!
எங்கள் பூமியை செழிக்க வைக்க
எங்கள் பூமிக்கு வந்தாயா!
எங்கள் ஆறு, குளங்கள் நிரம்பி வழிவதற்கு
வழி செய்ய வந்தாய மழையே!
எங்கள் விவசாயிகளின் கவலை கண்ணீர்களை
துடைக்க வந்த மழையே நீ வருவாய்!
எங்கள் சிறு குழந்தைகளை விளையாண்டு
மகிழ்விக்க செய்யும் மழையே வருக!
எங்கள் மண்ணின் வாசனைகளை அறிய
வைத்த மழையே நீ வருக!
இன்றை வாழ்க்கைகளை வாழ்வதற்கு
இயற்கை கொடுத்த மழையே நீ வருக!
நாங்கள் வாழ போகும் வாழ்க்கைக்கு
நீரைத்தரும் மழையே நீ வருக! வருக!

# மரம்...

எங்களுக்கு சுத்தமான காற்றுகளை தரும்
மரமே!
எங்களுக்கு நிழலாய் இருக்கின்ற மரமே!
நாங்கள் விளையாண்டு மகிழ்வதற்கு வளர்ந்த
எங்களுக்கு உண்ணுவதற்கு மரமே!
பழங்களை
கொடுக்கின்றாய் மரமே!
அழகான குயில் கிளிகளை வாழவைக்க
வந்த மரமே!
பறவைகளுக்கும் உண்ணுவதற்கு கனிகளை
தருகின்றாய் மரமே!
காற்று சூழலுக்கு அழகை தருகின்ற மரமே
நீ என்றென்றைக்கும் வளர்க.

மா.ஸ்வேதா
I. B.com (R)

# மழை

கார்மேக தோட்டத்தில்
பூத்த கண்ணாடி
பூ மழை

* தூறல் எனும் சாரல்
என்னை ஆட்கொள்ளும் போது
நாணம் என்னும் வெட்கம்
என்னுள் இருந்து விலகி
எங்கேயோ விலகி சென்று விடுகிறது.
பிறகு என்ன?

* மழைத் துளிகளின்
கீர்த்தனைகளில் நேற்று
பிறந்த குழந்தை போலவே தவழ்ந்து
வந்து நாம் புரளுகிறேன்

* மகிழ்ச்சி வெள்ளம் மனதில் பொங்கும்
போது
முதிர மழை பொழிந்து
மனங் குளிரும் மழை
சோக கண்ணீர் வழியும் போது
கன்னம் துடைத்து
மன பாரம் கரைக்கும் மழை

* வெற்றுத் தண்ணீர் அல்ல நீ
உயிரைத் தீண்டும் தேனமுதம்
உன்னை நீ எமக்களித்தாய்
நாமுமிமை என்றும் மறவோம்
என்றும் நீ எமக்கு வேண்டும்

# மழை

சா. சினேகா
B. Com (R)

ஒரு சில நிமிடங்களே
நீ மழைத்துளியாய்
வந்து சென்றாலும் (2)
அந்த உன் பொன் மணி
துளிகளால் என்னை பல
மணி நேரங்களுக்கும் மேலாக
சிலிர்க்க வைக்கிறாய் (2)
என்னை முழுவதுமாக உன்
சாரல்களால் நனைய வைக்கிறாய் --(1)
மழையே நீ என்னுள் வந்து
ஊடுருவி என்னை நனைப்பது (
ஒருபுறம் என்றால் (2) உன்னால்
நான் கவிதை என்னும் தமிழ்
வார்த்தைகளில் மூழ்கி ~~திளைத்து~~
மகிழ்ந்து நனைவது மறுபுறம். (2)

அ. தேன்மொழி
B.COM 15 (R)

* அழகே பொழுதே!!
கொஞ்சும் தமிழ் போல
என் நெஞ்சை நனைத்தாயே!
நீயும் இயற்கையின் பொழுதே!!

* உன் தேவைகளை எல்லாம் நான்
தீர்க்கின்றேன்!!
என் சோலைகளை எல்லாம் நீ
அழிக்கின்றாய்!!

* மரங்கள் அழுகின்றன தன்னை
வெட்டுவதை நினைத்து அல்ல!
எதிர்கால சந்ததியினரை நினைத்து!!

* தண்ணி கிடைக்காம நிலத்தடியில
ஆயிரம் அடி தோண்டி போர் போட
தெரிஞ்ச நமக்கு!!
அதே நிலத்தில ஒரு அடி தோண்டி ஒரு
மர செடி நட தெரியாதது ஏனோ!!

* மரங்களை வெட்டி வீட்டு கதவுகளை

நட்டு வைத்த நமக்கு...

உறைக்கவே... சுட்டெரிக்கிறது வெயில்...

பு. சுபாஷினி. பி. காம் - I

# மரம் மற்றும் ஆசிரியர் பற்றிய கவிதைகள்

# மரங்கள்

வழியெல்லாம் வெட்டப்படுகிறது
மரங்கள்
வயலோடு சேர்த்து நட்பையும்
பிரிக்கும் வரப்பு
வானம் பார்த்து காத்திருக்கும்
உழவனின் விழிகள்...
எப்போது வரும் மழை?...
மின்னலில் ஒளிர்கிறது
உழவனின் விழிகள்
மரத்தை வெட்டாதீர்கள் அது
மரமல்ல
இயற்கை அன்னை தந்த வரம்
இங்கே அழிவது மரங்கள்
மட்டுமல்ல
நம் எதிர்காலமும் தான்.....
இயற்கையை அழித்து
கிடைக்கும் பயன் என்று
நமக்கு நிலைக்காது..
மனிதனை நேசிக்க தெரிந்த
நமக்கு
மரத்தை நேசிக்க
தெரியவில்லை.

# ஆசிரியர்

தாயின் கருவில் உதித்து
நிலவின் வெளிச்சத்தில்
சோறூட்டி
பகலின் வெளிச்சத்தில்
விளையாடி
பள்ளி பருவத்தில்
நகையாடி
கல்லூரி என்னும்
வாழ்கையில்
தள்ளிவிடப்பட்ட நான்
இன்பத் தமிழென்னும்
கரையில்
விழுந்தெழுந்தேன்
என் கனவு ஆசிரியரே...!
நீ ஒரே ஒரு விதி செய்தாய்
என் மாணவன் என்று!
நான் ஒரே ஒரு விதி செய்தேன்
உன் ஆசிரியர் என்று
கனவோடு அல்ல
கல்வியோடு....!
ஒரு குழந்தையை
பெற்றெடுப்பவள் தாய்!
ஒரு நிலத்தை பயிரிடுபவன்
விவசாயி!
ஒரு சிலையை
வடிவமைப்பவன்
கலைஞன்!
ஒரு கவிதையை

படைப்பவன்
கவிஞன்
ஒவ்வொரு மாணவரையும்
மனிதராக்குபவர்
ஒரு ஆசிரியர்
சின்ன சின்ன
சொல்லெடுத்து !
சிறகடித்து பறக்க வைத்து !
இமைகள் போல பாதுகாத்து !
அன்போடு எண்ணம் பதித்து !
கல்வியோடு என் மாணவா
நீ வாழ
ஒரு முறையாவது
சொல்லுவாய்
நான் உன் ஆசிரியர் என்று..

அகரம் சொல்லி தந்த ஆசான்
வாழ்க வாழ்கவே
அறிவை புகட்டும் ஆசானிங்கு
வாழ்க வாழ்கவே
ஒளியை கற்று தந்த ஆசான்
வாழ்க வாழ்கவே
நல்வழியை கற்று தந்த ஆசான்
வாழ்க வாழ்கவே
கேள்வியை கேட்க வைத்த எங்கள்
ஆசான் வாழ்கவே
பதில் சொல்லி வைத்த எங்கள்
ஆசான் வாழ்கவே
பணிவை கற்று தந்த ஆசான்
வாழ்க வாழ்கவே
துணிவை கற்று தந்த ஆசான்
வாழ்க வாழ்கவே
அறிவியலை புரிய வைத்த
ஆசான் வாழ்கவே
வாழ்வியலை தெரிய வைத்த
ஆசான் வாழ்கவே
விடியலாய் வந்த எங்கள் ஆசான்
வாழ்க வாழ்கவே
அறியாமை இருளை அகற்றிய
ஆசான் வாழ்க வாழ்கவே.

BBA II YEAR

# மழை

மே.ராதை

வெண்மேகம் கிட்ட கிட்ட
கருமேகம் முட்ட முட்ட
இடி போகும் சத்தம் கேட்குதே...

கதிர் எல்லாம் ஆட்டம் ஆட
களைப்போடு சுமையை சாய்க்க
மகிழ்வோடு விவசாயி வந்தானோ...

காட்டாற்று வெள்ளத்தால்
நதி எல்லாம் நிறம்பியதே
நடு காட்டில் ஓடையும் அடங்காமல்
ஓடியதே...

மழையே மழையே
நீ இங்கு வருவதுயேன்
வான்மேகம் அழைப்பியதால்
நீ கண்ணீர் விடுவதுயேன்...

பால்போன்ற தேகமது
பனி சிற்பம் போல வந்து
படிமாக ரசிக்க வைத்து
படிகாமல் போனா தென்ன...

கண்ணாடி முன்னின்று
கவிதைகளை நான் வரைந்தேன்
கனவு என்ற புத்தகத்தில்
உன் பெயரை நான் வரைந்தேன் ...

பெயர் : K. ஜோதிகா.

வகுப்பு : BBA - II

கவிதை : மழை, ஆசிரியர்.

# மழை

ஒரு சில நிமிடங்களே நீ மழைத்துளியாய்
வந்து சென்றாலும் அந்த உன் பொன்
மணி துளிகளால் . . .

என்னை பலமணி நேரங்களுக்கும்
மோக சிலிர்க்க வைக்கிறாய்
என்னை முழுவதுமாக உன் சாரல்களால்
நனைய வைக்கிறாய்

காதல் எனும் சாரல் என்னை ஆட்கொள்ளும் போது
நாணும் என்னும் வெட்கம் என்னை விட்டு
விலகி எங்கேயோ தான் சென்றுவிடுகிறது பாதி என்ன.

மழைத் துளிகளின் கீர்த்தனைகளில் நேற்று
பிறந்த குழந்தைபோலவே தவழ்ந்து
வந்துதரம் புரள்கிறேன்.

# ஆசிரியர்கள் - கவிதை

பாடம் புகட்டி தவறை திருத்தி
செம்மை படுத்தி மனிதம் என்னும் புகுத்தி
சீராய் வாழ வழி வகுத்த ஆசான்
அனைவருக்கும் நன்றி கூறினால்
நான் பட்ட கடன்தீராது மேலும்
புகழ் பெற்று உரக்க ஆசிரியர்
தின வாழ்த்துக்கள் ...

பெயர் :- T. காயத்ரி

வகுப்பு :- B.B.A - II

தலைப்பு :- மழை

கார்மேக தோட்டத்தில் பூத்த
கண்ணாடி பூவே
காற்றில் பறந்து வந்து
என் மீது விழுந்ததேனோ
உன்னை ரசிக்க தெரிந்த என்னை
உரசி பார்க்க வந்தாயா
தொட்டு சென்ற நீ உன் குளிர்ச்சியை மட்டும்
விட்டு சென்றதேனோ
உன் வருகைக்கு முன்னே
குளிர் காற்றை அனுப்பி
மண் மட்டும் அல்ல எங்கள் மனங்களையும்
குளிர்வடைய செய்தாய்
பூமிக்கு நீ தந்த வருகையால்
மலர்ந்தது மலர்கள் மட்டும் அல்ல
என்னுடைய மனமும் தானே
மழையே உன் வருகையால்
எண்ணற்ற எண்ணங்கள் என்னுள்
ஓடமாய் பெருக்கெடுத்து ஓடுகிறது
அதனால் தான் குடை கொண்டு உன்னை
தடுக்க விரும்பாமல் கை விரித்து
தலை உயர்த்தி உன்னை ரசிக்கிறேன்.

கவிதை

தலைப்பு : மழை

பெயர் : தி. ஐஸ்வர்யா

வகுப்பு : BBA-III

:

# மழை

உன் பிறப்பிடமோ வானம்
ஆனால் உன் பிறப்பிற்கே காரணம் ஞாலம்!
ஆகையால் தாய்க்கு பெருமை
சேர்க்கவே பூத்துளியாய்
வெயிலில் தங்கத் துளியாய்
இருளில் வெள்ளித் துளியாய்
ஆக மொத்தத்தில் வைரத்துளியாய்
அனைவரின் வாழ்வில்
உயிர்த்துளியாய் உம்
சாரலில் நனைய வைக்கும்
கருமேகப் பனித்துளியே
இருதியில் உன்னை இரசித்த
என்னை கவிஞனாய் மாற்றிய
மழைத்துளியே!

ரா. கமல்

I. B.com (Applied)

கவிதையின் தலைப்பு

மரம்

# மரம்

மரம் வளர்ப்பது தான் இல்லையே அட மனிதா!
இருக்கும் மரத்தையாவது பாதுகாப்பாயா!

மரத்தை வெட்டி விற்றவன் ஏசி அறையில்
நிம்மதியாய் குளிர் காய்கிறான்.

கூலிக்காக மரம் வெட்டியவன் குடிக்க
நீரின்றியும் சுவாசிக்க நல்ல காற்றின்றியும்
கரைகிறான்....

மரத்தை விட பணம் போதுமென்று
நினைத்தவன் மழையின்றி பயிருடன் நாளும்
மடிந்து விடுகிறான்...

மரத்தை வெட்டுகையில் எனக்கென்ன என்று
நின்றவன் நிற்க நிழலின்றி கருகுகிறான்...

மரம் வெட்ட அனுமதி கொடுத்தவன் மனித
உயிரை உறிஞ்சி மரக்கன்று நடுவது போல
படம் எடுக்கிறான்.

மரம்....

களைப் பாற நிழல்
நிழல் கொடுக்க நீ....

விளையாட ஊஞ்சல்....
எங்களை சுமக்க நீ.....

பசி ஆற நாங்கள்....
பழம் கொடுக்க நீ.....

கை தட்டி ரசிக்க நாங்கள்
காற்றில் நடனம் ஆட நீ....

...ன் வாசிப்பது ஆசிரியர்

BBA II

...ரி

...மீனாட்சி

கருவறையில் சுமக்க
முடியா செல்வங்கள்
வகுப்பறையில் சுமக்கும்
என் நாமே!
"யாரோ பெற்ற பிள்ளையை"
தன் பிள்ளை போல்
"கை பிடித்து எழுதவும், படிக்கவும்"
கற்றுத்தரும் ஆசிரியரும்
ஒரு தாய் தானே!
புகழ் என்னும் ஆசையை விரும்பாமல்
பணம் என்னும் பாதையே தேடாமல்
"வரலாறுகளை படிக்கவைக்கவும்
புதிய வரலாறை படைக்கவைக்கவும்"
உங்களால் மட்டுமே முடியும்!
"அன்னை பாசமும் வீரமும்
கடவுளை எச்சரிக்கும் கோபமும்"
குழந்தைகளை கொஞ்சும் ரூபம்
நீங்கள் மட்டும் தானே.

...கள் வாசிப்பது ஆசிரியர்

...ள் 3BA II

...ணவி

முத்துமீனாட்சி

கருவறையில் சுமக்க
முடியா நெஞ்சங்கள்
வகுப்பறையில் சுமக்கும்
என் தாயே!
"யாரோ பெற்ற பிள்ளையை"
தன் பிள்ளை போல்
"கை பிடித்து எழுதவும், படிக்கவும்"
கற்றுத்தரும் ஆசிரியரும்
ஒரு தாய் தானே!
புகழ் என்னும் ஆசையை விரும்பாமல்
பணம் என்னும் பாதையை தேடாமல்
"வரலாறுகளை படிக்கவைக்கவும்
புதிய வரலாற்றை படைக்கவைக்கவும்"
உங்களால் மட்டுமே முடியும்!
"அன்னை மனமும் வீரமும்
கடவுளை எச்சரிக்கும் கோபமும்"
குழந்தைகளை கொஞ்சும் குணம்
நீங்கள் மட்டும் தானே.

முத்து மீனாட்சி.அ

BBA II

## நான் தான் மரம்!

"உன் தேவைகளில் எல்லாம்
நான் இருக்கிறேன்!"
என் சோலைகளை எல்லாம்
ஏன் அழிக்கிறாய்!
என்னை அழித்து, நிலங்களை அமைத்து
நீ உழைத்து
ஒன்றும் பயன் இல்லை மனிதா!

"நிழல் தந்த என்னை மறந்தாய்
அனல் வீச அதில் நீ வெந்தாய்!"
காற்றை தேடும் இன்றைய மனிதா
நேற்றைய நிலைமை ஏன் தான் மறந்தாய்!
"பறவைகள் கூட என்னை மதிக்கின்றது
அது கூட்டை கூட என் மீது கட்டுகின்றது"
அங்கும் இங்கும் நகர முடியாமல்
நான் இருக்கிறேன்
நகரங்களில் எல்லாம் இன்றோ
நான் காணாமல் போய்விடுகிறேன்.

எத்திசையும் என் திசையின் அசையும்

அதை பார்த்து உன் மனம் எப்போது இசையும்

"பாசம் அள்ளி தருவேன்

மண்வாசம் வீச மழை பொழிந்து தருவேன்"

"உன் தாகம் தீர்க்க நீர் அவசியம்

உன் தேகம் மறைக்க உடை அவசியம்"

"இதை நீ பெற நான் மிக அவசியம்"

இதனை புரிந்து கொள் மனிதா!

தலைப்பு : ஆசிரியர்

க. தனமணி

III - BBA

கவிதை

தலைப்பு : ஆசிரியர்

அக்கில் எமை வளர்த்து
அழகையே கல்வியால்
ஒழுக்கில் நிறைக்கின்ற
நேர்த்தியெல்லாம் கற்றவரே !

பேசிடவே மாணவரெல்லாம்
பிள்ளைகள் எமக்கென
ஆசிரியர் பணிதனிலும்
அன்பின் ஒதுவங்கள்

நாட்டுணர்வு முதன்மைதனில்
செல்வமும் அப்பொழுதிலே
நாட்டுப்பற்றெல்லாம் என்றாவதும்
சான்றும் ஒழுக்கத்தையும்
செல்நாங்கள் துடைக்கச்
ஒப்புநோக்கக் கருத்துடனே
ஆட்சிதனில் ஒன்றுகின்ற
அன்னையாகும் நீங்களன்றோ !

எத்தனையும் அளித்தாலும்
எச்சமின்றித் தீர்வுகண்டு
மெச்சிநீங்கள் அளித்தவைகளும்
இனியன்றி வளருமன்றோ !

அன்னையே தெய்வமென்றும்
அன்பே தெய்வமென்றும்
கண்ணின்றோர்
தெய்வமென்றும்
கதைகள் பல உணர்வலியும்
பள்ளிக் கூடமதிலும்
பண்பட்ட கொடையன்
உன்னை எங்கெங்கும்
உயர்த்தவும் நீங்களன்றோ !

பொன்போடு எழுமாநுத்தப்
அகத்தனைக்கும் கல்லூரியையைக்
கற்போடு கற்பிக்கும்
கடமையோர் பொறிகளோர் !

இன்றைய கொடுத்தாலும்
குறையாத செல்வத்தை
இன்றளவும் எமக்களிக்கும்
இன்புறும் வள்ளல்கள் !

நிலையின் இலக்கணை
சிறகை கண்டிருப்போம் ....
அனையும் பகைமைகளை
அழுதிருப்பு தலைவிசையோம் ....
கண்டுகொடு எடுத்தெழும்
இருகண்கள் திறக்கின்ற
திண்ணியம் பண்புடைப்பும்
சிறப்பெழும் தங்களன்றோ !

ஏ. விஜயாவின் இலாக
பெற்றவர்கிவ் நலடிவர
சான்றோரால் எடுவான்பும்
சாதனைகள் புரிபவரே !

வாழ்நாள் முழுவதையும்
மாணவர் நலன்களுக்கே
கொடுத்தாள் இலக்கியமே
தேனைக் கொடுத்தீர் வாழியவே !

நறிவை சிற்றுடைக்கு
நக்கடி அர்த்தத்தி
உறவை மருத்துவத்தை
பார்த்திருவர் தேவையாவர்
அறிவு சிறப்பாட்சி
அனைத்தையுக் கொண்டுவந்தி
தகுதி அடையோர் நாட்டமைச்சர்
தமிழ் உயர்வர் நீங்களன்றோ !

ர. ஸ்ரீதரன் அவர்களும் எனது
அறிவு புகட்டுமுறைமை
இன்றிருந்தாள் ஏற்றத்தினில்
இருந்திடப் புகழ்கின்றோம் ! *

தலைப்பு : ஆசிரியர்

ப. கமலி

III BBA.

# கவிதை

* அதிகாலையில் எழுந்து
ஆரவாரமாய் கிளம்பி
இன்முகமும் கொண்டு
ஈராறு மாதமும்
உண்மையாய் உழைத்து
உடல் தளர்ந்து
எளிமை கொண்டு
ஐயம் நீக்கி
ஒழுக்கம் கற்பித்து
ஓய்வதை மறந்து
ஔடதம் தந்து
தன்னை மெழுகென உருக்கி
மாணவர்களின் வாழ்வு வெளிச்சம் பெற
நாளும் உழைத்து எட்டாக்கனியான கருத்துக்களையும்
...க்காம் மனக்க செய்யும் எனதருமை
ஆசிரியர் பெருமக்களே.... *

# அன்னை கலை மற்றும் அறிவியல் கல்லூரி

## கோவிலாச்சேரி, கும்பகோணம்,

# தமிழ்த்துறை

# பைந்தமிழ் கவியரங்கம்

நாள்: 29.08.2019

கும்பகோணத்தை அடுத்துள்ள கோவிலாச்சேரியில் அமைந்துள்ள அன்னை கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் தமிழ்த்துறை நடத்திய பைந்தமிழ் கவியரங்கம் துவக்கவிழா இனிதே நடைப்பெற்றது. இவ்விழாவில் தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர் மற்றும் கவியரங்க ஒருங்கிணைப்பாளர் **முனைவர்.சு. அன்புச்செழியன்** வரவேற்றுப் பேசினார். அன்னை கலை மற்றும் அறிவியல் கல்லூரி **முதல்வர்.முனைவர்.சி.பொ. மாணிக்கவாசுகி** அவர்கள் தலைமை உறையாற்றினார்கள். அன்னை கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் தமிழ்த்துறைத் தலைவர் **முனைவர், ஜே. லொயோலா பீரிஸ்** அவர்கள் வாழ்த்துறை வழங்கினார்கள். கல்லூரியின் துணை முதல்வர் **பேராசிரியர்.சி. இளஞ்செழியன்** அவர்கள் வெற்றிப்பெற்ற மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கி பாராட்டினார்கள். இவ்விழாவின் இறுதியாக உதவிப் பேராசிரியர் **முனைவர்.இரா. தமிழ்ச்செல்வி** நன்றி கூறினார். இந்நிகழ்ச்சி ஏற்பாடுகளை தமிழ்த்துறை பேராசிரியர்கள் செய்துயிருந்தனர்.